ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

## பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்



நாள் :
01, பங்குனி 2026

Date:
15, மார்ச் 2026

www.vedaneri.org

வகுப்பு 29

# அறத்துப்பால் - இல்லறவியல்

## அதிகாரம் : 22

# ஒப்புரவறிதல்

உலக நடையினை அறிந்து பிறருக்கு முடிந்த உதவிகளைச் செய்தல்.



ஒப்புரவு = உதவி. அறிதல் = அறநூல்களுள் கூறப்படுவன இல்லாமல் தாமே உலக ஒழுக்கங்களை அறிந்து செய்தல்.

பிறரின் தேவையை தாமே யறிந்து உதவுதல். நன்மை செய்யும் மனப்பான்மை கொண்டிருத்தல்.

இதுவரை மனம், மொழி, மெய்களால் தவிர்க்க வேண்டுவனவற்றைக் கூறினார். இனி செய்யத்தகுந்தவற்றுள் எஞ்சியுள்ளவற்றைக் கூறுகின்றார்.

விலக்க வேண்டியனவாக இதுவரை கூறியவை :
மனம் - பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை
மொழி - புறங்கூறாமை, பயனில சொல்லாமை
உடல் - தீவினையச்சம்

செய்ய வேண்டுவனவாக இதுவரை கூறியவை :
அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை.



குறள்கள்: 1 - 3 ஒப்புரவின் சிறப்பு

1. மழை போன்றது.
2. பொருளனைத்தும் பிறருக்குக் கொடுத்து புண்ணியம் சேர்ப்பதற்கே.
3. ஒப்புரவிற்கு ஸமமான இன்னொன்று இல்லை.

குறள்: 4 ஒப்புரவின்மையின் தன்மை

4. பரிஹாரம் இல்லாதது. ஒப்புரவு அறியாதவன் பிணத்திற்கு ஒப்பானவன்.

குறள்கள்: 5 - 7 உபகாரம் செய்பவனது பொருள் பயன்படும் முறைமை

5. பேரறிவாளன் செல்வம் ஊருணி போன்றது.
6. ஊர் நடுவிலிருக்கும் பழமரம் போன்றவன்.
7. தப்பாமல் பயன் தரும் மூலிகை மரம் போன்றவன்.

குறள்கள்: 8 - 9 வறுமையால் ஒப்புரவு விடத்தக்கதல்ல

8. அறிவுடையோர் வறுமையிலும் ஒப்புரவில் தளரார்.
9. வறுமை வறுமையல்ல.

குறள்: 10 கேடு கேடல்ல

10. ஒப்புரவினால் துன்பம்வரின் புகழ் கருதி அதுவும் கொள்ளத்தக்கதே.



## 1. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு என்னாற்றும் கொல்லோ உலகு.

உயிர்கள் மழையைத் தருகின்ற மேகங்களுக்கு என்ன பிரதி உபகாரத்தைச் செய்கின்றன? (ஒன்றும் செய்கிறதில்லை). (அம்மேகங்களைப் போன்றவர்கள் உலகுக்குச் செய்யும்) உபகாரங்களும் பிரதியுபகாரங்களை வேண்டுவனவல்ல.

கைம்மாறு = பிரதி உபகாரம் - பதிலுதவி
கடப்பாடு = உபகாரம் - முறையறிந்து செய்யும் உதவி.
என் ஆற்றும் = என்ன செய்யும் ? (ஒன்றும் செய்வதில்லை என்னும் பொருளது)
உலகு = உலகிலுள்ள மக்கள்

உயிர் வாழ்க்கைக்குத் தேவையான நீரைக்கொடுக்கும் மேகத்திற்கு மக்கள் ஒரு பதிலுதவியும் செய்வதில்லை.

கடப்பாடு என்னும் சொல்லாலே அவசியம் கடமையெனச் செய்ய வேண்டும் என்பது பெறப்பட்டது.

உதவி செய்பவரது பதிலுதவி வேண்டாமையை அவரால் செய்யப்படும் உதவியின் மேலேற்றி, உதவி பதிலுதவி வேண்டுவனவல்ல கூறினார்.

மேலோர் பதிலுதவி வேண்டாது பிறர்க்கு உதவி செய்வார்.



## 2. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தல் பொருட்டு.

முயற்சி செய்து சேர்த்த செல்வமனைத்தும் தகுதியுடையவர்களுக்கு உதவி செய்தல் எனும் பயனுடையவாகும்.

தாளாற்றி = தளராத முயற்சி செய்து
செய்த = ஸம்பாதித்த
தக்கார் = தக்கவர் - தகுதி உடையவர் - கல்வி, கேள்வி, ஒழுக்கமுடையவர், தேவையுடையவர்.
வேளாண்மை = உதவி

உழைத்துச் சேர்த்த பொருள் தானே அனுபவித்தல் பொருட்டும் சேர்த்து வைத்து இழத்தல் பொருட்டும் இல்லாமல், தானனுபவித்தலோடு உரியவர்களுக்கு உபகாரம் செய்வதற்கும் பயன்படுத்தப்படவேண்டும் என்பது கருத்து.





## 3. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே ஒப்புரவின் நல்ல பிற.

**தேவர் உலகத்திலும் இவ்வுலகத்திலும் உபகாரம் செய்வதைப் போல நல்லதான வேறொன்றைக் பெறுதல் அரிதாகும்.**

புத்தேள் உலகம் = தேவலோகம்
ஈண்டு = இவ்வுலகு
பெறல் அரிது = பெறுதர்க்கு - கிடைப்பதற்கு - அரியதாகும்.

தேவர் உலகம் கொடுப்பவரும் பெறுபவரும் இல்லாமல் எல்லாரும் ஸமமாக இருக்கும் தன்மையுடையது. ஆகவே அங்கு உதவ வாய்ப்பு ஏற்படுவது அரிதானதாகும்.

இவ்வுலகத்திலும் பிறருக்கு தம்மால் இயன்ற உதவிகளைச் செய்தல் என்பது போல எல்லோருக்கும் ஸமமானது வேறொன்றுமில்லை என்பதால் அரிதானதாகும்.

வானுலகத்திலும் மண்ணுலகத்திலும் ஒப்புரவிற்கு மேற்பட்டது வேறொன்றில்லை.

**இவை மூன்று பாட்டாலும் ஒப்புரவின் சிறப்புக் கூறப்பட்டது.**





## 4. ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப் படும்.

உலகநடையினை அறிந்து பொருத்தமானதைச் செய்பவன் உயிரோடு வாழ்பவன் ஆவான். அவ்வுலக நடையினை அறிந்து செய்யாதவன் உயிருடன் இருப்பவனாயினும் இறந்தவர்களுள் ஒருவனாகக் கருதப்படுவான்.

ஒத்தது அறிவான் = தான் வாழும் ஸமூகத்தில் புகழுக்குப் பொருத்தமானதை அறிந்து, அதைச் செய்பவன்.
உயிர்வாழ்வான் = மனிதனாக வாழ்பவன்.
செத்தாருள் = இறந்தவருள்
வைக்கப்படும் = நினைக்கப்படும்.

உலகின் போக்கறிந்து அறத்தைச் செய்து வாழாதவனிடத்தில் உயிர்வாழ்தலுக்குரிய அறிவும் செயலும் காணப்படாமையால் உயிரற்றவனாகக் கருதப்படுவான் என்றார்.

வேதநடையிலிருந்து தவறுபவனுக்கு வேதத்திலேயே பரிஹாரம் காணப்படுவதால் அதிலிருந்து உய்ய வழிவுண்டு.

உலக நடையிலிருந்து தவறுபவனுக்கு பரிஹாரம் எங்கும் காணப்படாமையால் என்றும் பழி இருக்கும்.

சாஸ்த்ரம் சொல்லும் வழியில் வாழ்பவனாக இருந்தாலும் அவன் வாழும் காலத்திய ஸமூகம் ஏற்கும்படியும் பல்வேறு அறங்களைச் செய்து புகழுடன் ஒருவன் வாழ வேண்டும். இல்லையென்றால் அவன் வாழாதவனாகக் கருதப்படுவான்.

இதனால் உலக நடையிலிருந்து தவறுபவனுக்கு உய்யும் வழி இல்லை என்பது கூறப்பட்டது.

5. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

உலகநடையினை விரும்பிச் செய்யும் நல்ல அறிவினை உடையவனுடைய செல்வம், அனைவருக்கும் பயன்படும் குளமானது நீரால் நிறைந்திருப்பது போன்றதாகும். (அனைவருக்கும் நீண்டகாலம் பயன்தரத்தக்க பொதுச்சொத்து போன்றதாகும் என்பது கருத்து).

ஊருணி = ஊரில் (வாழ்பவர்களால் உண்ணப்படும் நீர்) உள்ள குளம்.
உலக அவாம் = உலக நடையினை அறிந்து விரும்பிச் செய்யும்
பேரறிவாளன் = பெரிய அறிவினை உடையவன்.
திரு = செல்வம்



ஒப்புரவு உள்ளவனிடமுள்ள செல்வம் நீர் நிறைந்திருக்கும் குளம் போல ஊருக்கு நீண்டகாலம் பயன்தரத் தக்கதாகும்.

## 6. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
## நயனுடை யான்கண் படின்.

செல்வமானது ஒப்புரவு எனும் நற்பண்பு உள்ளவனிடத்திலே இருக்குமானால், அது ஊரின்நடுவே அனைவருக்கும் பொதுவான ஒரு பழமரமானது நிறைய கனிகளைப் பழுப்பது போன்றதாகும்.

பயன்மரம் = கனிகளால் பயன்படும் மரம்.
உள்ளூர் = ஊர் உள்.
நயன் = நீதி. இங்கு ஒப்புரவு.

உலகநீதிகளுள் ஒப்புரவு சிறந்த நீதி என்பதால் ஒப்புரவையே நயன் என்றார்.

ஒப்புரவு உடையவன் யாவருக்கும் பயன் தரும் பழமரம் போல அனைவருக்கும் நன்மை செய்வான் என்பதாகும்.



# 7. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகை யான்கண் படின்.

செல்வம் பெருமைக்குரிய நற்பண்புகள் உடையவனித்தில் இருந்தால், அது எல்லா உறுப்புகளும் நோய்க்கு மருந்தாகி தப்பாமல் பயன்படும் மரத்தினைப் போன்றதாகும்.

மருந்தாகி = மரத்தின் விதை, வேர், பட்டை, இலை, பூ, காய், கனி என எல்லா உறுப்புகளும் மருந்தாவது
தப்பா = தவறாமல், வீணாகாமல்
பெருந்தகையான் = நல்லறிவும் நற்பண்புகளும் மிகுதியாக உடையவன்.

ஒரு நல்ல மரத்தின் எல்லா உறுப்புகளும் வீணாகாமல் பயன்படுவது போல நல்லறிவும் நற்பண்புகளும் உடையவரிடத்தில் உள்ள செல்வம் எல்லாவிதங்களிலும் மக்களுக்குப் பயன்படுவதாக இருக்கும்.

மலையுச்சி, பாறையிடுக்குகள், மற்ற செடிகள் மறைத்திருப்பது போன்ற இடங்களில் உள்ள மருந்துச் செடிகள் பயன்படாமல் தவறிப் போய்விடுகின்றன. அப்படி இல்லாமல் ஊருக்குள் எளிதில் அணுகக் கூடியதாக இருக்கும் மருத்துவ குணமுடைய மரம்போல பெருந்தகையாருடைய செல்வம் இருக்கும்.

பறித்தல், முறித்தல், வெட்டுதல் முதலானவற்றால் மரங்களுக்குக் குறைவு ஏற்பட்டாலும், அவை தவறாமல் மாறுபடாமல் பயன்தருவது போல, பெருந்தகைமை உடையவனிடத்தில் உள்ள செல்வமானது கொடுப்பதால் அவனுக்கு குறைவு ஏற்பட்டாலும் மாறுபடாமல் மக்களுக்கு பயன்படுவதாக இருக்கும் என்பதுமாகும். நல்லவர்களிடம் உள்ள செல்வம் நாளும் பயன்படும் மூலிகை மரம் போன்றதாகும்.

இவை மூன்று பாட்டாலும் உபகாரம் செய்பவனது பொருள் பயன்படும் முறை சொல்லப்பட்டது.

## 8. இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
## கடனறி காட்சி யவர்.

**தாம் செய்யத் தகுந்த காரியங்களை அறிந்த தெளிந்த அறிவுடையவர் செல்வம் தன்னிடத்தில் குறைந்த காலத்திலும் பிறருக்கு உதவி செய்வதில் தளரமாட்டார்.**

இடனில் பருவத்தும் = செல்வம் குறைந்த காலத்திலும்
ஒப்புரவிற்கு ஒல்கார் = உதவுவதில் தளர்வடைய மாட்டார்
கடன் அறி காட்சியவர் = தமது கடமையை - அறத்தை - அறிந்த தெளிந்த அறிவினையுடையவர்.

**அறத்தின் பயனை அறிந்த தெளிந்த அறிவினையுடையவர் தம்மிடத்தில் பொருள் இல்லாத வறுமை ஏற்பட்டு மற்ற அனைத்தும் போனாலும் ஒப்புரவினை விட்டுவிடமாட்டார்.**

வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று.
(குறள்: 955, குடிமை)

**அறத்தின் வலிமையை அறிந்தவர் தமது வறுமையிலும் பிறருக்கு உதவும் பண்பினைக் கைவிடமாட்டார்.**



## 9. நயனுடையான் அல்கூர்ந்தான் ஆதல் செயுநீர செய்யா தமைகலா வாறு.

பிறருக்கு உதவும் நற்பண்பினை இயல்பாக உடையவன் வறுமை உடையவனாவது என்பது செய்யும் உதவிகளைச் செய்ய இயலாமையால் உண்டாகும் வருத்தத்தினை அடைதலாகும்.

நயனுடையான் = ஒப்புரவு உடையவன்
அல் கூர்ந்தான் = வறுமை உடையவன்
செயு(ம்) நீர = செய்யும் தன்மை உடைய உதவி
செய்யாது = செய்ய இயலாது
அமைகலாவாறு = அமைந்த நிலைமையாகும்.

ஒப்புரவு உடையவன் பொருள் இல்லாமையை வறுமையாகக் கருதுவதில்லை. கொடுக்க இயலாமையால் உண்டாகும் வருத்தமே அவனுக்கு வறுமை ஆகும்.

இவை இரண்டுபாட்டாலும் வறுமை வந்தாலும் ஒப்புரவு விடத்தக்கதல்ல என்பது கூறப்பட்டது.



# 10. ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன் விற்றுக் கோட்டக்க துடைத்து.

பிறருக்கு உதவி செய்வதால் ஒருவனுக்குக் கேடு வரும் என்றால் அந்தக் கேடு ஒருவன் தன்னை விற்றாயினும் வாங்கிக் கொள்ளத்தக்கது ஆகும்.

கேடு = துன்பம்
கோட்டக்க துடைத்து = கோள் தக்கது உடைத்து = கொள்ளத் தக்கது உடைத்து = வாங்கிக்கொள்ளும் தகுதி உடையது.

ஒப்புரவினால் கேடு வந்தாலும் அது புகழுண்டாக்குதலைக் கருதி, ஒருவன் தன்னை விற்றாவது ஒப்புரவு செய்ய வேண்டும் என்பது கருத்து.

இதனால் ஒப்புரவினால் கேடு வந்தாலும் அது கேடில்லை என்பது சொல்லப்பட்டது.



ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)



1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Instagram - swami_om_karananda

3. Facebook - Swami omkarananda

4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam


94430 51910

www.vedaneri.org

vedapuricamps@gmail.com